செ.வெ.எண்:372

செய்தி வெளியிடு

நாள் 27/06/2012

இன்று(27/06/2012) மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி பா.வளர்மதி அவர்கள் தேனாம்பேட்டை D.M.S வளாகத்தில் உள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் ஆய்வுகள் மேற்கொண்டார் வந்திருந்த மாற்றுத்திறனாளிகளின் குறைகளை கேட்டறிந்து இலவச பயண பேருந்து சலுகை அட்டை, கல்வி உதவித்தொகை, உதவி உபகரணங்களை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கினார், மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை இதுவரை 265027 நபர்களுக்கு மாதாந்திர உதவித்தொகையாக ஆண்டிற்கு ரூ. 3180 கோடி அளவில் வழங்கப்படுகிறது என்றும் திருமண உதவித்தொகை பொருத்தவரையில் பட்டம்/பட்டயம் படித்து மணமக்களில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருந்தாலும் அவர்களுக்கு ரூ 50,000 மற்றும் 4 கிராம் தங்கம் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை தெரிவித்தார்கள் மேலும் சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியிடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு 3% பணி இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்தார்கள் அவ்வமயம் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி கண்ணகி பாக்கியநாதன் இ.ஆ.ப மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9